# 500 ஆதிவாசிகள் காங்கிரசைத் தலைமுழுகினர்

REGD. No M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D P F

| | | |
|---|---|---|
| தனி இதழ்: ஒரு அணா | சென்னை: ஆனிமீ 18உ வெள்ளி (2—7—54) | மலர்: 2 |
| இலங்கையில் 10 சதம் | வெளியூர்: ஆனிமீ 19உ சனி (3—7—54) | இதழ்: 16 |


## நூற்றுக்கணக்கானவர் அதை பின்பற்றுகின்றனர்!

## அமைச்சர்கள் குறுக்கீடே இவ்வெளியேற்றத்திற்குக் காரணம்!

### சோட்டா நாகபுரி காங்கிரஸ் கலைகிறது

ராஞ்சி, ஜூன் 30—

சோட்டா நாகபுரி காங்கிரஸ் கட்சியில் ஆரம்ப உறுப்பினர்களாக உள்ள ஆதிவாசிகள், நூற்றுக்கணக்கில் காங்கிரசை விட்டு வெளியேறுகின்றனர்.

நேற்று மட்டும் 500 ஆதிவாசிகள், காங்கிரசில் உள்ள தங்களுடைய ஆரம்ப உறுப்பினர் பதவிக்கு முழுக்குப் போட்டனர்.

ராஞ்சி மாவட்ட காங்கிரசின் தலைவராக இருக்கிற, ஆதிவாசி சமூகத்தைச் சேர்ந்த ராமபிரசாதம் முண்டா என்பவர் தலைவர் பதவியை ராஜினாமா செய்துவிட்டதோடு, ஆரம்ப உறுப்பினர் பதவியையும் உதறித் தள்ளிவிட்டார்.

தனது ராஜினாமா பற்றி அவர், பத்திரிகை நிருபர்களிடம், "ஒவ்வொரு நிலையிலும் அமைச்சர்களின் குறுக்கீடு இல்லாமல் எந்தவித தீர்மான வேலைகளையும் காங்கிரசில், செய்ய முடியவில்லை" என்று குறிப்பிட்டார்.

ஆத்மிஜாதி சேவா மண்டல் எனும் பெயரில் நடைபெற்று வரும் ஆதிவாசி நலன்களுக்குப் பாடுபடும் ஒரு சங்கத்தில் முண்டா தொடர்பு கொண்டிருப்பது பல காங்கிரஸ்காரர்களுக்கும், சில அமைச்சர்களுக்கும் கசப்பாக இருந்ததாம்.

ஒரு மாவட்ட காங்கிரசிற்கு ஆதிவாசி ஒருவர் தலைவராக இருந்தது இதுதான் முதல் தடவையாம்!

அவர் ராஜினாமா செய்ததைத் தொடர்ந்துதான், மற்ற ஆதிவாசிகளும் காங்கிரசிலிருந்து வெளியேறுகின்றனர் எனத் தெரிகிறது.

## 'மாநிலத்தின் பலமும் பெருமையும் நிலப்பரப்பளவை பொறுத்தது அல்ல'

## இந்தியாவின் மதிப்பு உயர ஒற்றுமை தேவையாம்!

### பண்டிதரின் சந்தர்ப்பவாதம்

சிம்லா, ஜூன் 30—

"மாநில புனரமைப்புக் குழுவின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. ஒவ்வொரு மாநிலமும் தனது பரப்பை அதிகரித்துக் கொள்வதிலே கவனம் செலுத்தியிருப்பதாகத் தெரிய வருகிறது. பீகாரும், மேற்கு வங்கமும் இந்த விஷயத்தில் ஒன்றோடொன்று மோதிக் கொள்கின்றன."

"ஒரு மாநிலத்தின் பலமும், பெருமையும் அதன் பரப்பளவைப் பொறுத்திருக்கவில்லை; மாறாக, மாநிலங்கள் எவ்வளவுக்கெவ்வளவு சிறிதாயிருக்கின்றனவோ அவ்வளவு சிறந்த நிர்வாகத்தையுடையதாக இருக்கும்,"—என்று பண்டித நேரு இங்கு குறிப்பிட்டார்.

மேலும் அவர் காங்கிரஸ் தோழர்கள் தங்கள் கடமைகளைச் செய்யத் தங்களைத் தகுதியுடையவர்களாக ஆக்கிக் கொள்ள வேண்டும்; பெரும் பொறுப்புகளை நிர்வகிக்க தங்களைத் தயார் செய்து கொள்ளவேண்டும்; 1947 ஆண்டுக்கு முன் தங்கள் வேலை, சுதந்திரத்திற்காகப் பாடுபடுவதாயிருந்தது; இன்று நல்லதொரு நிர்வாகம் அமைப்பதற்காக அவர்கள் பாடுபட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

ஹிமாசல பிரதேச காங்கிரஸ், தோழர்கள் சட்டசபை உறுப்பினர்கள் ஆகியவர்களின கூட்டுக் கூட்டத்தில் பேசுகையில் மேலும் நேரு குறிப்பிட்டதாவது:—

"அகில உலக முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்கள் எல்லாவற்றிலும், இந்தியா மேற்கொள்கிற சுதந்திரமான முடிவுகள், வல்லரசுகளின் கவனத்தை ஈர்த்தல் தவிர்க்க முடியாததாகும்.

விருப்பு வெறுப்பற்ற முறையில் சமாதானத்தை நாமே இந்தியாவைப் போன்ற ஒரு நாடு போட்டி போடுகின்ற இரு கட்சிகளிடையே தங்களுடைய முடிவுகளை—காரியங்களை ஒரு முடிவுக்கு வருவதற்காக, மாறதிக்கொள்ளச் சங்கடப்படும் நேரங்களில் முக்கியமானதும் உபயோகமுள்ளதுமான வேலைகள் பலவற்றைச் செய்ய முடியும்.

சுதந்திரம் பெற்ற பிறகு இந்தியாவின் மதிப்பு மிக உயர்ந்திருக்கிறது. அகில உலக பிரச்னைத் தீர்ப்பதில் அது ஒரு பெரும் பங்கேற்க வேண்டியுள்ளது. நாள்தோறும் நாட்டின் பொறுப்புகள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. இந்த பொறுப்புகளை நிறைவேற்றத் தேவையான தகுதியைப் பெறவும், இந்தியாவின் ஜனநாயகம் வளர்ந்துகொண்டே இருக்கவும், நாடு ஒற்றுமையுடனும் உறுதியுடனும் இருக்க வேண்டும்," என்றார்.

### டாக்காவில் மீண்டும் தீ!

ரூ. 4 லட்சம் சேதம்

டாக்கா, ஜூன் 30—

நாராயண்கஞ்ச் எனும் இடத்தில் இன்று ஒரு சணல் கிடங்கில் தீ பிடித்துக் கொண்டதின் விளைவாக ரூ 4 லட்சம் சேதமென்று சொல்லப்படுகிறது.

இந்த வாரத்திலேயே முன்பு ஏற்பட்ட ஒரு தீ விபத்தினால் ரூ 1 லட்சம சணல் சாம்பலாயிற்று.

இந்தத் தீயை அணைக்க இரண்டு மணி நேரம் தீ அணைக்கும்படையினர் நான்கு இயந்திரங்களின் உதவியுடன் போராடினர்.

இரும்புத் தகடுகளால் பிரிக்கப்பட்டிருந்த இரண்டு சணல் கிடங்குகளில் ஒன்றன்பின் ஒன்றாக தீ பரவி நாசம் செய்தது.

## கோவாவில் அடக்குமுறை!

### இந்திய சர்க்கார் பம்பாயுடன் கலந்து பேசும்!

கோவாவில் அன்னியத் துருப்புகள் ஏராளமாக உள்ளனவாம்

புதுடில்லி, ஜூன் 30—

சட்டத்தையும், அமைதியையும் பாதுகாப்பதற்குத் தேவைப்படும் அளவுக்கு மேல் கோவாவில் ஐரோப்பிய, ஆப்பிரிக்க துருப்புகளை கோவா சர்க்கார் வைத்திருப்பதாக இந்திய சர்க்காருக்குத் தெரிய வருகிறது.

ஜூன் 18-ந் தேதி நடைபெற்ற கோவா சுதந்திர தின விழாவின்போது கோவா மக்கள் மீது கடுமையான அடக்குமுறையை வீசியதாகத் தெரிகிறது.

இவை இரண்டும் இந்தியாவில் கிளர்ச்சியை உண்டாக்கக்கூடியதென்று நம்பப்படுகிறது.

ஆகவே இது பற்றி பம்பாய் சர்க்காருடன் இந்திய சர்க்கார் வெளிநாட்டிலாகா காரியதரிசி ஆர்.கே நேரு கலந்து பேசுகிறார்.

கோவாவில் சர்க்கார் மக்கள் மீது அடக்குமுறைகளை வீசுவதை இந்திய சர்க்கார் கண்டித்த ஜூன் 26-ம் தேதியன்று குறிப்பொன்றை டில்லியிலுள்ள போர்ச்சுகல் தூதரிடம் கொடுத்தது.

5000 மக்கள் வாழும் டையூ தீவில் 320 ஐரோப்பிய அதிகாரிகளும், ஆப்பிரிக்கத் துருப்புகளும் உள்ளனர் என்றும், மேற்கொண்டு துருப்புகள் வந்து இறங்கியவண்ணம் உள்ளதெனவும் தெரிகிறது.

★

### பாதிரிகள் கைது!

கோவா கெடுபிடி!

பம்பாய், ஜூன் 30—

ரோமன் கத்தோலிக்க பாதிரிகள் இருவரை, கோவா அரசாங்கம், ஜூன் 18-ல் நடந்த கோவா சுதந்திர இயக்கத்தின் ஆண்டு விழாவில் கலந்துகொண்டதாகக் குற்றம் சுமத்தி கைது செய்துள்ளதாகத் தெரிகிறது.

### பத்திராதிபர் கொலை

காசபிளாங்கா, ஜூன் 30—

டாக்டர் எமைல் ஏய்ராட் என்ற மொராக்கோவின் மிகப் பெரிய பத்திரிகையின் நிர்வாகி, கலகக்காரர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அவரைச் சுட்டுக் கொல்வதினின்று தடுக்க முயன்ற வழிப்போக்கர்கள்மீது கொன்றவனுடன் வந்த ஒரு கலகக்காரன் துப்பாக்கியால் சுட்டதனால் ஒரு பிரெஞ்சு அதிகாரியின் 14-வயது மகளுக்கு முழங்காலில் படுகாயமும், ஒரு வியாபாரிக்குக் காயங்களும் ஏற்பட்டன எனத் தெரிகிறது.

### நீதி நிர்வாக இலாகாக்கள்

தனியாக பிரிக்கப்படுகின்றன!

சென்னை, ஜூன் 30—

ஜூலை முதல் தஞ்சை, மலபார் தென்கன்னடம் ஆகிய மூன்று மாவட்டங்களிலும் நீதி இலாகா, நிர்வாக இலாகாவிலிருந்து பிரிக்கப்பட்டு தனியாக இயங்கும். இதன் பிறகு இன்னும் திருச்சி, மதுரை, சென்னை ஆகிய மாவட்டங்களில்தான், இப்படிப் பிரிக்காமல் இரண்டு இலாகாக்களும் ஒன்றாக இருக்கின்றன.

இனி, செங்கல்பட்டு, வட ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களுக்கு இப்போதுபோல் ஒரே நீதிபதிகளில்லாமல், தனித்தனி நீதிபதிகள் செங்கல்பட்டிலும், வேலூரிலும் இரண்டு மாவட்டங்களுக்கும் நியமிக்கப்படுவார்கள் எனத் தெரிகிறது.

### குவாடிமாலாவில் மீண்டும் குமுறல்?

குவாடிமாலாமீது படையெடுத்த கலகத் தலைவருக்கும்—புதிய சர்க்கார் தலைவருக்கும் இடையே நடைபெற்று வரும் சமாதான உடன்பாடு பேச்சு வார்த்தையில் முட்டுக்கட்டை நிலைமை ஏற்பட்டு, பேச்சு வார்த்தை நிறுத்தப்பட்டுள்ளது. உடன்பாடு ஏற்படாவிட்டால், கலகப் படைகள், குவாடிமாலா நகரங்களின்மீது குண்டு வீசும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### சர்க்கரை

இந்தியாவிலுள்ள சர்க்கரை ஆலைகள் தமது 53 - 54ம் ஆண்டு உற்பத்தியிலிருந்து மேலும் 60,000 டன் சர்க்கரையை வெளி மார்க்கெட்டில் விற்பனை செய்ய இந்திய சர்க்கார் அனுமதித்திருக்கிறது.

### குடியாத்தம் உப-தேர்தல்

வேலூர், ஜூலை 1—

குடியாத்தம் உபதேர்தலுக்கு அபேட்சை மனுக்களை வாபஸ் பெறும் கடைசி தினமாகிய இன்று பொதுத் தொகுதியில் பி. ஏ. கோவிந்தராஜு (சுயேச்சை) தமது அபேட்சை மனுவை வாபஸ் பெற்றுக்கொண்டார்.

ரிசர்வ் தொகுதியில் திரு. ஏ. எம். சுப்பிரமணியமும், திரு. குப்புசாமியும் தங்களுடைய அபேட்சை மனுவை வாபஸ் பெற்றுக் கொண்டனர்.

இறுதியாக போட்டியிடுவோர்கள் விபரம் வருமாறு:—

பொதுத் தொகுதி:

திரு. கே. காமராச நாடார் (காங்கிரஸ்)

திரு பி. கே. கோதண்டராம செட்டி (கம்யூனிஸ்டு)

ரிசர்வ் தொகுதி:

திரு. டி. மனவாளன் (காங்)

திரு சி. ஆதிமூலம் (சுயேச்சை)

திரு எம். தெய்வசாமி (ஐ மு.)

### காக்ஸ் டேரியில் மேலும் 40 வீடுகள்

சென்னை, ஜூலை 1—

காக்ஸ் டேரியில் வீடிழந்த சேரிவாசிகளுக்கு மேலும் 40 தெரு வீடுகள் கட்ட நகர அபிவிருத்தி டிரஸ்ட் தலைவர் கூறிய யோசனையை டிரஸ்ட் ஏற்றது.

இதற்கு 18,900 செலவாகும். இது கட்டி முடிந்தால் வெளியேற்றப்பட்ட சேரிவாசிகளுக்கு வீடுகள் கிடைத்துவிடும் எனத் தெரிகிறது.

### பச்சரிசி—11 அணா!

கூடலூர் பகுதியில் பச்சரிசி படி 11 அணாவாகவும் புழுங்கல் அரிசி 0—10—6 அணாவாகவும் இருக்கிறது. கையிருப்பு சம்பாவே தேக்கமாயிருக்கிறது. குறைவு. கிராம அரசாங்கத்துக் கடைகளுக்குப் போட்டு விடுகிறார்கள் என்ற பீதி பிரசாரகர்களிடம் பரவியிருக்கிறது.

# நம் நாடு

ஆசிரியர் அண்ணாதுரை

சென்னை 2—7—54 வெள்ளி


# பரவசப் பாசுரம்!

நவ சீனப் பிரதமர் ஷோ-யென்-லெய்யும், இந்தியப் பிரதமர் பண்டித நேருவும், மூன்று நாட்களாகக் கலந்து பேசி கண்ட முடிவை, அப்படி கலந்து பேசாமலே கண்டிருக்க முடியும். திபெத் விஷயமாக, சீனாவிற்கும்—இந்தியாவிற்கும் ஏற்பட்டுள்ள உடன்படிக்கையின் துவக்கத்திலேயே, இரு பிரதமர்கள் சந்திப்பின் முடிவில் வெளியான அறிக்கையின் சாரம், விளக்கமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

எனவே, முன்னமேயே இருவரும் சந்திக்காமலேயே தீர்மானித்த ஒரு போக்கை, உறுதி செய்வதற்காகச் சந்தித்தனர் என்பது பொருளற்றதேயாகும். இருநாட்டு மக்களுக்கும், இச்சந்திப்பினால் காதொடிந்த ஊசியளவு நன்மையும், ஏற்பட்டுவிடப் போவதுமில்லை; இரு நாட்டு அமைச்சர்களின் நடைமுறையிலும் தவறு கண்டால் அதைத் திருத்தும் ஆற்றல் அந்தந்த நாட்டு குடிமக்களுக்கு இல்லவுமில்லை; மக்களின் ஆசையை, தேவையான பொழுது நிறைவேற்றிக் கொள்ளும் வகையில், இரண்டு நாட்டின அரசியல் அமைப்பும் அமைந்திருக்கவுமில்லை.

இரண்டு மந்திரிகளின் சந்திப்பின் விளைவாக, இரு நாட்டு மக்களுக்கும் நற்பயன் விளைவதாக இருந்தாலும் இல்லாமற்போனாலும், இருவரின் சந்திப்பும், இருவரும் எதிர்பார்த்தபடி, அமெரிக்காவிற்கும் பிரிட்டனுக்கும், ஆசிய விவகாரத்தில் குழப்பத்தை மூட்டி இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. அதே காலத்தில் வாஷிங்டன் நகரில் கூடிய அமெரிக்க தலைவர்—பிரிட்டிஷ் பிரதமர் சந்திப்பை, பின்னணிக்குத் தள்ளிவிட்டது டெல்லி சம்பவம் என்பதிலும் ஒருவருக்கும் ஆட்சேபணை இருக்க நியாயமில்லை.

ஆசியாவின் எதிர்காலம் உருவாவதில், டெல்லி சந்திப்பு எந்த அளவு பயன்படும் என்பது இனிதான் தெரிய வேண்டும். ஆனால், உடனடியாக, உருவான பலன் என்று சொல்லக்கூடிய நிலையில், இந்தியப் பிரதமர் நேரு பண்டிதரை, புதிய 'பூஜ்' தீண்டி இருக்கிறது என்பது உண்மையிலும் உண்மையாகும். உலக விவகாரத்தில், நேரடியாக, சமீப காலமாகத் தான் இந்தியா பங்கு கொள்ளத் தொடங்கி இருக்கிறது. அதன் பெயர் கூறி, அதன் சார்பில், உலக நடப்பில் கலந்துகொள்ளும் உரிமை பெற்றுள்ள பண்டிதர், ஆரிய பரம்பரையிலும், பரவசப்படுவதிலும் ஆச்சரியமொன்றுமில்லை. அவர் இடத்தில் யார் இருந்தாலும், அவர்களும், அதே போக்கில்தான் நடந்துகொள்வர் என்பது எதிர்பார்க்கக்கூடியதே!

உலக மக்கள் எல்லாம் நாகரீகம் பெருகும், உலகாயுதத்தில் மயங்கி உழன்று கொண்டிருந்த நேரத்தில், ஆரியவர்த்தம்தான் ஆத்ம விளக்கைத் தூக்கிக் கொண்டு, அவர்களுக்கு வழிகாட்டி உய்வித்தது எனப் பீத்திக்கொள்ளும் பரம்பரையில் வந்த பண்டிதர், இந்தியப் பிரதமராக இருந்து, உலக அரங்கில் ஒரு பாத்திரமாக ஆடிப் பாடும் வாய்ப்பும் பெற்றிருப்பது பண்டிதருக்குப் பரவசமாகத்தானே இருக்கும்? அப்பரவசமும், மற்றவருக்கு ஏற்பட முடியாத அளவில் கூடியுள்ளதாகத்தானே இருக்க முடியும்?

கொரியாவில், தனது கொள்கையை துவக்கத்தில் ஒப்புக்கொள்ள மறுத்தவர்கள் முடிவில் ஒப்புக்கொள்ள முன்வந்தனர் என, பண்டிதர் தனது கொரிய கொள்கைக்கு 'முத்தாய்ப்பு' வைத்துப் பேசி இருக்கிறார்.

இந்தோ—சீன பிரச்சினை குறித்து இலங்கையில் முடிவிற்கு வந்த, தனது கருத்தை ஏற்றுக்கொள்வதில் பிறருக்கு இப்பொழுது விருப்பமில்லையானாலும், இனி விருப்பமேற்படக் கூடுமெனவும், தனது இலக்கை முடிவின் சிறப்பைக் காட்டி, அடுத்த ஆசிய சமாதான நாடகத்தில் நடிக்கத் தனக்கும் ஒரு வேடம் தருமாறு, பண்டிதர் ஜெனீவா மாநாட்டினருக்கு 'மகஜர்' சமர்ப்பிக்கிறார்!

"உலக விவகாரத்தில் இந்தியாவின் பொறுப்பு வளர்ந்து வருகிறது; வளர்ந்துவரும் மதிப்பைக் கட்டிக்காப்பதற்காகவும், கடமைகளை நிறைவேற்றுவதில் நாம் தகுதி வாய்ந்தவர்கள் என்பதைக் காட்டிக் கொள்வதற்காகவும், பலம் பொருந்தியவர்களாகவும் ஒற்றுமையுடையவர்களாகவும் நாம், நம்மை ஆக்கிக் கொள்ள வேண்டும்."

மேற்கூறியவாறு இந்தியாவின் மதிப்பு உலக அரங்கில் உயர்ந்து வருகிறது என்று சொல்லிவிட்டு, அதேமூச்சில் உள்நாட்டில் நாம் எப்படி இயங்கவேண்டும் என்பதைக் குறித்தும் குறிப்பிட்டிருக்கிறார்.

'பலம்—ஒற்றுமை' இரண்டும் கொண்டதாக மக்கள் இருக்க வேண்டும் என்று பண்டிதர் ஆசைப்படுகிறார். 'பலம்' என்ற சொல்லையும் 'ஒற்றுமை' என்ற பதத்தையும் எந்தப் பொருளில் பண்டிதர் பிரயோகித்திருக்கிறாரோ? விரிவான பொருளிலா? அல்லது குறிப்புள்ள மேல்வரு போலவா?

மேற்கூறிய இரண்டு சொற்களையும், எந்த முறையில் உபயோகித்திருக்கிறார் பண்டிதர் என்று கண்டுபிடிப்பதில், நாம், அதிகம் கவலை கொள்ளத் தேவை இல்லை. அவரே, அதன் உண்மையை விளக்கி விட்டும் இருக்கிறார்.

மாநிலத் திருத்தக் குழுவிடம், சாட்சியம் கூறும் ஒவ்வொரு மாநிலத்தவரும், தம் தம் மாநிலத்தின் நிலப்பரப்பை விரிவாக்கிக் கொள்ளும் வகையில் கோரிக்கைகளைக் கொடுத்து வருகின்றனர். அவைகளுக்காக வாதப் பிரதிவாதங்களும் நடத்தி வருகின்றனர்.

இவ்வாறு தம் தம் மாநில நிலப்பரப்பை விரிவாக்கிக் கொள்ளும் விருப்பத்தை, ஒவ்வொருவரும் விட்டொழிப்பதுதான், இந்தியாவின் 'பலமு'ம், 'ஒற்றுமை'யும் வளருவதற்கு வழி எனப் பண்டிதர் பேசுகிறார்!

ஏற்கனவே, பற்பல காரணங்களால், தங்கள் தங்கள் மாநிலங்களில் இருந்து துண்டாடப்பட்டுவிட்ட நிலப் பகுதிகளை மீண்டும் பெற, பாதகமடைந்தவர்கள் கோரிக்கைகளை வெளியிடுவது, அவைகளைப் பெற முயற்சிப்பது, பண்டிதரின் கருத்துப்படி, இந்தியத் துணைக் கண்டத்தின் 'பலத்தை'க் குறைத்து விடுவது; 'ஒற்றுமை'யைக் குலைத்து விடுவது!

அவர்கள் கோரிக்கையில் நியாயம் இருக்கும்—இருக்கத்தான் இருக்கிறது.

கோரிக்கையில் நியாயமிருக்கிறதா இல்லையா—அதுபற்றி கவலை கிடையாது பண்டிதருக்கு! அவர் கூற்றுப்படி, இந்தியாவின் 'பலம்' குறையக்கூடாது! 'ஒற்றுமை' குலையக்கூடாது! பண்டிதருக்கு, அந்த இரண்டுந்தான் முக்கியம்!

தாம் விரும்பும் 'பலம்' 'ஒற்றுமை' ஆகிய இரண்டையும், இந்தியாவிற்கும் பெற்றுத் தருவதற்காக, ஒரு மாநிலத்தின் நிலப்பரப்பு 'பெரிதாக' இருந்தால் என்ன? 'சிறிதாக' இருந்தால் என்ன? என்று, பண்டிதர், நியாயம் பேசுகிறார் நியாயம்!

அவர் பேசும் நியாயம், மாநிலங்களை விரிவாக்கிக் கொள்ள மற்றவர் கோரும் நியாயமான கோரிக்கையை விட்டொழிக்கக் கேட்டுக் கொள்ள வந்த அரசியல் உபதேசியார், அதற்காகத் தாம் கூறும் நியாயம், தமது அபிலாஷையின் அடிப்படையையே தகர்த்துவிடுவதாக இருக்கிறதே, என்று கூட நினைத்தும் பார்க்காமல் பேசுகிறார்!

"ஒரு அரசின் பலமும் சிறப்பும், அதன் நிலப் பரப்பின் அளவைப் பொறுத்திருக்கவில்லை! நிலப்பரப்பில் ஒரு அரசு எவ்வளவு சிறிதாக இருக்கிறதோ அந்த அளவில், அதன் நிர்வாகம் சிறப்புடையதாக இருக்கும்!',

மாநிலங்கள், தாங்கள் இழந்த பகுதிகளை மீண்டும் பெற முயற்சிப்பது கண்டு, 'நிலப்பரப்பு சிறிதாக இருந்தால்தான் நிர்வாகம் சிறக்கும்' எனப் பேசி அவர்களின் நியாயமான கோரிக்கைகளை விட்டுவிடக் கோரும் பண்டிதர், இந்தியத் துணைக் கண்ட விஷயத்தில் ஏனோ, தாம் பிறருக்குக் கூறும் அதே நியாயத்தை, மேற்கொண்டு நடந்து காட்ட முன்வர மறுக்கிறார்? ஊருக்கு ஒரு நியாயமும், தமக்கு ஒரு நியாயமும் என்ற போக்கில் அல்லவா, பண்டிதரின் சொல்லும் செயலும் இருக்கிறது?

ஒரு அரசின் நிலப்பரப்பு எந்த அளவு சிறிதாக இருக்கிறதோ, அந்த அளவில் நிர்வாகம் சிறப்புடையதாக இருக்கும் எனப் பண்டிதர் கூறுவது, இந்தியத் துணைக் கண்டத்தில் நடைபெற்று வரும் தமது நிர்வாகம் சீர்குலைந்து நடக்கிறது என்பதை, பண்டிதரே ஒப்பாமல் ஒப்புகிறார் என்றுதான் கொள்ளவேண்டியதாக இருக்கிறது. சிறப்புடைய நிர்வாகம் மக்களுக்குக் கிடைக்கவேண்டும் என்பதில் அவருக்கு உண்மையிலேயே விருப்பமிருக்குமானால், இந்தியத் துணைக் கண்டத்திலிருந்து நமது திராவிடத்தைப் பிரித்துவிட பண்டிதர் முன்வர வேண்டும்.

ஒரு அரசிற்குள்ள பெருமையும், பலமும் அதன் நிலப்பரப்பின் அளவைப் பொறுத்திருக்கவில்லை என்று தாம் கூறிஇருப்பதில் நியாயம் இருக்கிறது என அவர் மனப்பூர்வமாக நம்புவதாக இருந்தால், நமது திராவிடத்தைப் பிரித்துவிடுவதால், எஞ்சும் இந்தியாவின் பலமும் பெருமையும், அதனால் குறைந்து விடாது என்ற உண்மையையும் பண்டிதர் ஒப்புக் கொண்டாக வேண்டும். பண்டிதர் செய்வாரா?

நாடு சிறிதாக இருந்தால் நிர்வாகம் உயர்வாக இருக்கும் என்ற முடிவு, இங்கிலாந்து வரலாற்றைப் படித்ததால் பண்டிதருக்கு ஏற்பட்டிருக்க வேண்டும். சுவிஸ் நாட்டு நடைமுறையும் அந்த முடிவிற்கு வர, அவருக்குத் தூண்டுதல் கொடுத்திருக்கலாம்! நாடு சிறிதாக இருந்தாலும், பெரிதாக இருந்தாலும், மக்களின் பரம்பரைப் பண்பும், வாழ்க்கை லட்சியமும், நிர்வாகத்தை ஒழுங்காக்கவும் சீர்குலைக்கவும் உதவுகின்றன என்ற உண்மையும் பண்டிதர் அறியாததல்ல.

'ஒரு அரசின் சிறப்பும் பலமும், அதன் நிலப்பரப்பின் அளவைப் பொறுத்ததாக இல்லை!'

'ஒரு அரசு எவ்வளவு சிறிதாக இருக்கிறதோ, அந்த அளவு நிர்வாகமும் சிறப்புடையதாக இருக்கும்!'

தாம் கூறிய இந்த இரண்டு தத்துவங்களையும் மனதில் கொண்டு, திராவிடத்தைப் பிரிக்க பண்டிதர் முன்வர வேண்டும். வருவாரா?

நவசீனம் பிரதமரை சந்தித்ததால் ஏற்பட்ட மட்டற்ற பரவசத்தினால், பண்டிதர், இந்தப் பாசுரம் பாடி இருந்தாலும் இருக்கக்கூடும்.

இவ்வாறு கூறினதற்கு அவருடைய நோக்கம் எதுவாக இருந்தாலும், நமது திராவிட நாடு கோரிக்கையை வலியுறுத்துவதற்கு, அவருடைய வாயுரையும் நன்கு துணை நிற்கிறது என்பதை எவராலும் மறந்துவிட முடியாது.

## கொள்கையை......

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

டிலே தோன்றிய எதிர்ப்புணர்வுக்கு மதிப்புத் தர மறுத்தார் மமதையால், ஆச்சாரியார்!

ஆனால், ஜன உள்ளத்தின் உணர்வுக்கு, எண்ணத்திற்கு மதிப்புத் தந்து, அந்த தீய திட்டத்தை எடுத்தார் என்பதற்காக மட்டும், நாம் கனம் காமராசருக்கு நன்றியும் பாராட்டும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்த கல்வித் திட்டம் கைவிடப்பட்டதற்கு, தி. மு. கழகத்தின் அரசியல் விளக்கமெல்லாம் என்னவென்றால்—ஒரு சிறுபான்மை சமுதாயத்தின் நலன்களுக்காக, ஒரு பெரும் சமுதாயத்தையே—அறிவுத் துறையில் அருகவிட்டு வரும் திராவிடச் சமுதாயத்தையே அழித்தொழிக்கத் திட்டமிட்டார் ஆச்சாரியார்; நியாய உள்ளம் கொண்ட பலரும் திட்டத்தை எதிர்த்தனர்; நாமும் எதிர்த்துப் போராட்டமே நடத்தினோம்; ஆச்சாரியாரோ விடாப்பிடியாக தனது சமுதாயத்தின் நலனை மட்டும் கருதினாரே அன்றி, எதிர்ப்புக்கு மதிப்பளிக்க அவர் விரும்பவில்லை; ஆனால் காமராசரின் மான உணர்வு, தான், திராவிடர் என்பதை மறைத்துக் கொள்ள முடியாதவாறு செய்துவிட்டது; திட்டத்தை திரும்பப் பெற்றார்"—அவ்வளவுதான்!

இதிலே எங்களுக்குள்ள பங்கெல்லாம்-திட்டத்திற்கு எதிர்ப்புக் காட்டினர் எல்லாக் கட்சியினரும்; யார், பூனையின் கழுத்தில் மணி கட்டுவது?—என்ற நிலையில், நாங்கள்தான் திட்டத்தை எதிர்த்துப் போரிலே குதித்தோம்!

எந்தக் காரணத்துக்காகப் போரில் ஈடுபட்டோமோ, அந்தத் திட்டம் தொலைந்தபோது நாங்கள் வெற்றி விழாக் கொண்டாடுவது எப்படி தவறாக இருக்க முடியும்? அந்த வெற்றியில் பங்கு பெறுகிற எல்லோரும் பாராட்டுதலுக்குரியவர்களே!

இன்றுதான், நாம் ஸ்தாபன ரீதியாக; மாநாடு ரீதியாக, கல்வித் திட்ட ஒழிப்பு வெற்றி விழாக் கொண்டாடுகிறோம். வெற்றிகண்டு மகிழ்வது மாவீரர்களின் பண்புகளில் ஒன்றல்லவா?

போராட்டங்களெப்படி நடத்துவது என்ற ஒத்திகையில் வெற்றி பெற்றிருக்கிற நாம், அந்த வெற்றி விழாவிலேயே, கூட நமது லட்சியத்தை மீண்டும் மீண்டும் எடுத்துச் சொல்லி, வருகிறோம்.

அண்மையில் நாஞ்சில் பகுதியில் தோழர் கருணாநிதி சுற்றுப்பயணம் செய்தார். இன்று, கேரளத்து நாட்டினர், நமது லட்சியத்தைப் புரிந்துகொள்ள முயலுகிறார்கள்; நம்மை உணரத் தலைப்பட்டிருக்கிறார்கள்; கேரள சோஷியலிஸ்டு கட்சி, தி. மு. கழக லட்சிய அடிப்படையின் பெரும் பகுதியை ஒப்புக் கொண்டிருக்கிறது; நமக்கு நல்ல பிரச்சார வசதி மட்டும் இருக்குமானால், நமது கொள்கைகள் கேரளத்தில் நல்ல பலனைப் பெறும் என்பதில் சந்தேகமில்லை.

திராவிட நாடு பிரிந்தாலன்றி நம் நாட்டு மக்கள் வாழ மார்க்கம் இல்லை என்று நாம் திட்டவட்டமாகச் சொல்கிறோம்."

## மறைவு

சாத்தூர் நகராட்சி மன்றத் தலைவர் ஜ. க. கந்தசாமி முதலியார் எம். ஏ., அவர்கள் 27-6-54 மதியம் 12-30க்கு இயற்கை எய்தினார் என்ற செய்தியை வருத்தத்துடன் அறிவிக்கிறோம்.

# சித்தூர் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக மாநாடுகள்!

# ‘கொள்கையை, கொள்கையால் எதிர்க்க முடியாத கோழைகள்!’

## ‘தென்னாட்டின் அறிவும், வளமும் இன்றி வடநாடு வாழ முடியாது!’

### வேலூர் அரசியல் மாநாட்டில் கி. மனோகரன் திறப்புரை

27—6—54-ல் நடைபெற்ற வடாற்காடு மாவட்ட தி. மு. கழக இரண்டாவது அரசியல் மாநாட்டில் திறப்புரையாற்றுகையில், தோழர் நாஞ்சில் கி. மனோகரன் அவர்கள், நம்முடைய கொள்கைகளும், இலட்சியங்களும் வெகு வேகமாக மக்களிடையே வளர்ந்து வருகின்றன என்று குறிப்பிட்டு, “அப்படி வளர்ந்து வரும் இலட்சியத்தை அரசாங்கமாயினும் சரி, அன்றி வேறு யாராயினும் சரி, இலட்சியத்தை—இலட்சியத்தால் மோதுகிற கொள்கைகளை—கொள்கைகளால் மோதுகிற அரசியல் நாகரிகத்தை அவர்கள் அறிந்தவர்களாயிருக்கவில்லை,” என்றார்.

“நமது, வளர்ந்து வரும் இலட்சியத்தை ஒடுக்க அவர்களுக்கு வலிவும், தெம்பும் இல்லாதபோது, இலட்சியத்தை ஏற்றிச் செல்லும் தோழர்கள் மீது அடியாட்களையும், குண்டர்களையும் ஏவுகிறார்கள்,” என்று சுட்டிக் காட்டினார்.

காங்கிரஸ் ஜனநாயகம் பேசுவதே வெறும் கேலிக்கூத்தாகும்! இன்று, காங்கிரஸ் ஒரு யதேச்சாதிகாரியாகத்தான் விளங்க முடியும். காரணம், பல மொழியும், பல்வேறுபட்ட எண்ணங்களையும் கொண்ட மக்களை ஒரே ஆட்சியில் வைத்திருந்த வெள்ளையனுக்குத் தரப்பட்டது, ‘யதேச்சாதிகாரி’ என்ற பெயர்தானே? அதே கொள்கையைக் கடைப்பிடிக்கும் காங்கிரசாருக்கும் அந்த ‘யதேச்சாதிகாரி’ என்ற பெயர்தானே பொருத்த முடியும்,” என்றார்.

“வெள்ளையன், உரிமை கோரிய மக்களின் மீது ஏவிய எல்லா அடக்குமுறைகளையும் இன்று காங்கிரசார் ஏவுகின்றனர். காங்கிரசாருக்கு, எப்படியாவது, குமரி முதல் இமயம் வரை காங்கிரஸ்தான் காட்டை ஆள வேண்டும் என்ற எண்ணமும் இருக்கும்போது, எப்படி, இது, யதேச்சாதிகாரப் போக்கு அல்ல என்று சொல்ல முடியும்? ஆங்காங்கே, ஜனநாயகம் கொலைக்களத்தில் நிறுத்தப்பட்டு, பலியிடப்படுவதை நாம் பார்க்கிறோம்,” என்று குறிப்பிட்டார்.

“இந்த தன்னலப் போக்கை எதிர்ப்பவர்களில் இருவர் முக்கியமானவர்கள்—ஒன்று, தென்னாடு! மற்றொன்று, வங்கம்!! சுதந்திரப் போரிலும் சரி, இன்றும் சரி, இந்த இரண்டு பிரதேசங்கள் மீதும் ஆட்சியாளருக்கு பயம் இருக்கத்தான் செய்கிறது! காரணம், பிறப்பாலேயே இருபகுதி மக்களும், வீரர்கள் மட்டுமல்ல—மான உணர்வும் கொண்டவர்கள்! வங்கத்திலே வாழ்பவர் மங்கோலியர்கள்! தென்னாட்டவர், திராவிடர்!!’ —என்றார்.

“இன்னும் ஒரு காரணமும் உண்டு, எம்மைப் பார்த்து வடக்கு பயப்படுவதற்கு! அவர்களுக்கு நமது வளமும், அறிவும் தேவைப்படுகிறது; தென்னாட்டு வளமும், அறிவும் இன்றி வடவர் நிச்சயம் வாழ முடியாது! ஆகவேதான் வடக்கு, திராவிடப் பிரிவினையை கேலிசெய்கிறது—கண்டிக்கிறது,” என்றார்,

“ஆகவே தோழர்களே! நாம் இன்று அடிமைக் கூடாரமாக இருக்கும் திராவிடத்தை உரிமைக் கோட்டையாக்க—திராவிட நாடு, திராவிடருக்காக்க தொடர்ந்து போரிட வேண்டும். அந்தப் போரிலே நீங்கள் எல்லாம் பங்கு பெற முன்வந்து இலட்சிய புருஷர்களாய் வாழ வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்,” என்று வேண்டிக் கொண்டார்.

தொடர்ந்து, தோழர் கி. மனோகரன் அவர்கள் பேசியதாவது:—

“தி. மு. கழகம் கடந்த 2, 3 ஆண்டுகளில் அபரிமிதமான வளர்ச்சியையும், வலிமையும் பெற்றிருக்கிறது. ஒரு காலத்தில் நமது வளர்ச்சி கண்டு பொறுக்காதவர்கள் எல்லாம் இன்று நம்மோடு ஒட்டி உறவாட விரும்புகின்றனர். நாம் தொல்லை பலபட்டு, கழகத்தை வளர்த்து வந்திருக்கிறோம் — வளர்த்துக் கொண்டிருக்கிறோம். இன்று, நாம் வளர்ந்துள்ள நிலை கண்டு, நம்மோடு சேர்ந்து பணியாற்ற கழகத்துள் நுழைய பலர் எண்ணுகின்றனர். இந்த நிலைக்கும் காரணம் இல்லாமலில்லை

காங்கிரஸ் விடுதலை இயக்கமாக இருந்த காலத்தில், முக்கியமாக நான்கு வகை சுதந்திரத்தைக் கேட்டனர் — எண்ண, எழுத, பேச, கூட்டம் கூட்ட ஆகியவை அவர்களின் உரிமை முழக்கங்களாயிருந்தன. அதே காங்கிரசார், இந் நாட்டை ஆளும் பொறுப்பை, ஏழு ஆண்டுகளுக்கு முன் பெற்றனர். அன்றிலிருந்து இன்றுவரை, அவர்கள் வெள்ளையனிடம் எதிர்த்த உரிமைகளைக் கோரினார்களோ அவற்றை இந்த நாட்டு மக்களுக்குப் பரிபூரணமாகத் தந்திருக்கின்றார்களா என்றால், இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்

நம்முடைய கழகத் தோழர்களின் புத்தகங்களும், நாடகங்களும் தடை செய்யப்பட்டிருக்கின்றன; கூட்டங்களுக்கு, 144 போடப்பட்டிருக்கிறது.

பொதுச் செயலாளர் அண்ணா அவர்களின் ‘ஆரியமாயை’ தடை செய்யப்பட்டது; ஆனால் இந்த வ. ஆ. மாவட்டத்தில் அந்தத் தடையை மீறி, பட்டி தொட்டிகளெல்லாம் ‘ஆரிய மாயை’ புத்தகங்களை மக்களுக்கு வீதி வீதியாகச் சென்று படித்துக் காட்டியிருக்கின்றனர் இங்கு, சிலையைத் திறந்து வைப்பதற்கு அண்ணா வந்தபோது எவ்வளவு எதிர்ப்புக் காட்டியிருக்கின்றனர் காங்கிரசார்! செய்யலாமா? அது அரசியல் நாகரிகம் தெரிந்தவரின் செயலா?

வேலூரில் அண்ணா அவர்கள் காந்தியார் சிலையைத் திறந்து வைத்தது அரசியல் வரலாற்றில் இடம் பெற்றுவிட்ட சம்பவமாக இன்றிருக்கிறது

திராவிடர் சமுதாயத்தை—அதன் சின்னஞ் சிறு குழவிகளின் கல்விக் கண்களை அவித்துவிடுவதின் மூலம், அழித்தொழிக்கத் திட்டமிட்டு ஆச்சாரியார் தீட்டிய கல்வித் திட்டத்தை நாம் எதிர்த்தோம்; நாடே எதிர்த்தது; என்றாலும், காட்

(2-ம் பக்கம் பார்க்க)

# ஐந்தரை லட்சம் பேர் வேலை தேடி அலைகின்றனர்

## சர்க்கார் தரும் புள்ளி விவரம்

வேலை தேடித்தரும் நிலையங்களில் 1954-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தைக் காட்டிலும், மே மாதத்தில் அதிகமான பேருக்கு வேலை வாங்கித்தரப் பட்டுள்ளது; என்றாலும், வேலை தேடித் தரும் விஷயத்தில் இந்தியா முழுமையிலும் குறிப்பிடத் தகுந்த முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை.

சென்ற மாதத்தைக் காட்டிலும் அதிகமாக 3,930 வேலை காலி இடங்கள் இருந்தன.

இந்த மாதத்தில் மொத்தம் 22,633 பேருக்கு வேலை காலியிருந்தது சென்ற மாதத்திலும் அதிகமாக 1400 பேர் வேலைக்கமர்த்தப்பட்டதையும் சேர்த்து மொத்தம் 14380 பேர் வேலை பெற்றனர்.

வேலை தேடித் தருமாறு இம் மாதம் 1,12,113 பேர் பதிவு செய்து கொண்டனர். இந்த மாதம் முடிய மொத்தம் 5 32,925 பேர் வேலை வேண்டுமெனப் பதிவு செய்துள்ளனர். சென்ற ஏப்ரல் மாதம் இந்த எண்ணிக்கை முறையே 1,11,811 ஆகவும், 5,26,290 ஆகவும் இருந்தது.

மே முடிவு வரை, இந்திய அரசாங்கத்தின் தொழில் இலாக்கா மேற்கொண்டிருக்கும் பயிற்சித் திட்டங்களின்படி, 484 பெண்கள், 398 அகதிகள் உட்பட மொத்தம் 1891 பேர் நாட்டில் உள்ள பல்வேறு தொழிற் பயிற்சிக் கூடங்களில் பயில்கின்றனர்.

இத்துடன், கோனி - பிலாஸ்பூர் பயிற்சிப்பள்ளியில் 107 பேர் தொழிலாசிரியப் பயிற்சி பெறுகின்றனர் மேற்கு வங்கத்திலும் உத்தரப் பிரதேசத்திலும் 625 அகதிகள் உற்பத்தி வேலையில் நடைமுறைப் பயிற்சி பெற்று வருகின்றனர்.

---

ஹைதராபாத் சர்க்காரின் ஒத்துழைப்புடன் அசோசியேட்டட் சிமெண்ட் கம்பெனியார் ரூ 1½ கோடி செலவில் ஒரு சிமெண்ட் தொழிற்சாலை அமைப்பார்கள்.

# வாழ்ந்த நாம் வீழ்ந்தது ஏன்?

## திராவிடம் வாழாதென்போர் கோழைகளா? அல்லது எத்தர்களா?

### ‘திராவிடம்’ காண நாம் உறுதி பூண்டுள்ளோம்

#### அரசியல் மாநாட்டில் எம். பி. சாரதி, எம். சி. வரவேற்புரை

27—6—54-ல், வேலூரில் நடைபெற்ற வ. ஆ. மாவட்ட தி. மு. கழக 2-வது அரசியல் மாநாட்டில், வரவேற்புக் குழுத் தலைவர் எம். பி. சாரதி, எம். சி., அவர்கள் மாநாட்டிற்கு வந்திருந்தோர் அனைவரையும் வரவேற்றுப் பேசியதாவது:—

“தலைவர் அவர்களே, அண்ணா அவர்களே, ஆதரவு காட்டும் பெரியோர்களே, ஆர்வமுள்ள தோழர்களே, தோழியர்களே, மாண்பு மிக்க மாநாட்டுப் பிரதிநிதிகளே, பரிவுள்ள பார்வையாளர்களே, வருக! வருக! என்று உங்களை வணக்கமுடன் வரவேற்கிறேன். இம்மாவட்டத்தின், நல்ல மனதுடைய மக்கள் சார்பிலும், இம்மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவன் என்ற முறையிலும், உங்களை உளமுவந்து வரவேற்கிறேன்.

“வேலூரிலே நமது மாநாடு நடக்குமா என்று பெருமூச்சு விட்டகாலம் போய், நடத்துவோம் என்று குதூகலிக்கும் காலம் வந்து, நடத்தியுள்ளோம் என்ற பெருமை கொள்ளும் கட்டம் வந்துவிட்டோம். வளரும் நமது இயக்கத்தின் சக்தியை விளக்க இதுவொன்றே போதுமென்று எண்ணுகிறேன்.

“மதமும் விதியும், மடமையும் கேடுகளும், சாதிச் சனியன்களும், சண்டாளப் பட்டமும், சநாதனர் சூட்சிகளும் ஓங்கி வளர்ந்த ஓர் நிலையில், இந்நாடு, அகண்ட இருட்டிலே தள்ளப்பட்டு, அழிந்துபோன பூங்காவாக ஆகி, குலும் மாடுகளுடு, அருவருப்புள்ள சந்துக்களும் மேய்கிடன் ஆயிற்று இந்த நிலையை இன்னும் சகித்திடலாமா? வான் வலியும, தோள் வலியும் மிக்க வளமான நாட்டிலே வாழ்ந்த நாம், வீழ்ந்து, கெடக் காரணம் என்ன? மீண்டும் எழவேண்டும்’ என்ற எண்ணத்தில், 1916-ல் விதை தூவப்பட்டது. டாக்டர் டி. எம். நாயரும்; சர் பி. டி. தியாகராயரும் முதல் விதை தூவினர். அது முளைத்து படிப்படியே, தென்னிந்தியர் நல உரிமைச் சங்கமாகவும், நீதிக் கட்சியாகவும் வளர்ந்தது. வாயற்ற ஊமையராய், செவிடர்களாய், குருடர்களாய் குறைநிறை மக்களுக்கு மருந்து ஊட்டிப் பிணி அகற்றும் மருந்தகம் போலாயிற்று!

“உரிமை இழந்து, உணர்ச்சி குன்றிய, நாயினும் கீழாய் நலிந்து கிடந்த சமயத்தில், தனிப் பெருந் தலைவர் பெரியார் அவர்கள் முன்வந்து, தன்மான உணர்ச்சியூட்டி, மீட்சி பெறும் முயற்சி வலுப்பெற்று வளர்ந்தது 1944-ல் சேலத்தில், இந்த நற்பயிருக்கு களைபெடுக்கப்பட்டு, புல்லுருவிகளைக் களைந்து, திராவிடர் கழகமாகத் திகழச் செய்து, 1949-ல், முன்னேற்றக் கிளை விட்டு, ஓங்கி வளர்ந்த உயர் மரமாக இருக்கிறது. நம் இயக்கத்தின் சிறு குறிப்பு இது.

“அரசாளப் புகவில்லை ஆங்கிலேயன்; ஆனாலும், அவனிடம் சிக்கியது நாடு. வாளின் வலிமையால் மட்டுமல்ல குடிகெடுத்தவன்; இங்குள்ள கயவஞ்சகத் துரோகிகளால், கட்டியும் கொடுக்கப்பட்டது

“சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்னர் ஆங்கிலேயன் ஆளுகைக்கு உட்பட்ட அகண்ட இந்தியா—இன்றைய பாரத், பர்மா, பாகிஸ்தான், சிலோன் எல்லாவற்றையும் உள்ளடக்கியது. பர்மா, அன்றைய இந்தியாவின் பல மாகாணங்களுள் ஒன்றுதான்; சமீப காலங்களில் பர்மா தனிநாடு இலங்கை இன்னொரு நாடு. பேர் தெரியாதிருந்த பாகிஸ்தான் இரு துண்டங்கள்—என்றாலும், தனிநாடு.

எஞ்சி நிற்பது இன்றைய இந்தியா. இதன் பிடி, டில்லியில்! வாழ்வு, வடநாட்டு மார்வாரி, குஜராத்திக் கும்பலிடம்!!

“ஒன்றரை கோடி மக்கள் தொகை கொண்ட பர்மா, 60 லட்சம் பேர் கொண்ட இலங்கை—அண்டையிலே நம் கண் முன்னே உரிமையுள்ள நாடுகளாய், உலகிலே ஓர் உயர்வுடன் உலவும்போது, அவைகளிலும் மிகப் பெரிய நாடான — ஐந்து கோடி மக்களுள்ள நம் அருமைத் திராவிடத்தின் வாழ்வைப் பற்றி பேசுபவர்கள் உண்மையிலேயே ஏமாந்த கோழைகளா, அன்றி ஏமாற்றும் பித்தலாட்ட எத்தர்களா?

பாராயிருப்பினும். அவர்கள் தகுதியற்ற கடைநிலை மாந்தர் என்று கருதி, நம் பணி மேல் செல்ல உறுதிபூண்டு, ஊக்கமுடன் செயலாற்றி, ‘பெற்றிடுவோம் எங்கள் இன்பத் திராவிட நாட்டினை’ என்று எக்காளமிட்டு வந்துள்ள உங்களை வாழ்த்தி வரவேற்கிறேன்.

“அதிகார போதையில் அறிவு ஒளி மங்கி, மகா பெரிய பண்டிதரும் மமதையோடு பேசியதைக் கண்டு நாம் பரிதாபப்பட்டு, அவரை மன்னித்துவிட்டு, மறந்திடவும் எண்ணினோம். நமது உரிமைக் குரல் ஓசையிலும் உதாசீனப்படுத்திவிடப்பட்டு, ஒலிக்கும் நிலைக்கு ஒலித்திடுவர் பண்டிதர். நமது முன்னேற்றமும் வளர்ச்சியும் கண்ட ஆளவந்தார் அலறிப் புடைத்து ஆவேசங்கொண்டும் நிலைக்கு வந்துள்ளனர்; நாம் இன்னும் முன்னேறுவோம்.

“நமது குறிக்கோள் உயர்ந்தது—உயிரினும் மிகச் சிறந்தது—எனும் உணர்வால், தொல்லையும் துன்பமும் ஒரு பொருட்டல்ல—என்ற எழுச்சியால் உந்தப்பட்டு,

‘எத்தகைய போர் என்று
இயம்புக
எதனையும் செய்வது என்று
ஏவுக’

பணிமேல் புறப்பட—இதோ பல்லாயிரம் பட்டாளமாய் அணியணியாய் வருகின்றோம் ஆணையினை நிறைவேற்ற—என்று ஆர்ப்பரித்து வந்துள்ள உங்களை அன்புடன் வரவேற்கிறேன்.”

---

# வாரீர்! பொதட்டூர்ப்பேட்டை அழைக்கிறது! ஜூலை 10—11!

# செய்திக்கதிர்

**கோர்ட் கட்டணம்**

கிரிமினல் சட்டத் திருத்த மசோதா பற்றி தனது கருத்தைத் தெரிவிக்கையில் தோழர் ஆச்சாரியார் கோர்ட் கட்டணம் களைக் குறைக்க வேண்டியதில்லை என்று கூறியதாகத் தெரிகிறது.

★

**கட்டுப்பாடு**

புகையிலை வர்த்தகத்தில் மந்தம் ஏற்படுவதைத் தடுக்க புகையிலை விவசாயத்தின் உற்பத்தி அளவைக் கட்டுப்படுத்த சட்டமியற்றுவது பற்றி மத்திய சர்க்கார் யோசனை செய்கிறது.

★

**பங்கீடு**

புதுச்சேரியில் மீண்டும் பெட்ரோல் மீது பங்கீடு ஏற்படுத்தப் பட்டிருக்கிறதாம். சென்ற மார்ச் மாதம் வழங்கப்பட்ட கார்டு அடிப்படையில் பங்கீடு வழங்கப்படும் என்று தெரிகிறது.

★

**பலத்த மழை**

பம்பாயிலும் அதைச் சுற்றியுள்ள பிரதேசத்திலும், பலத்த காற்றுடன் மழை பெய்திருக்கிறது. இதனால் விமானப் போக்குவரத்து பாதிக்கப்பட்டிருக்கிறது.

★

**தண்ணீர் பிரச்சினை**

பெரியாறு நீர்த்தேக்கத் தண்ணீர் தகராறு பற்றி சென்னை—திரு-கொச்சி அதிகாரிகளிடையே நடைபெற்ற மாநாடு எந்தவிதமான முடிவுக்கும் வராமல் முடிவுற்றது. தண்ணீரை எந்த அளவுக்கு மின்சாரம் உற்பத்தி செய்ய சென்னை சர்க்கார் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதே முக்கியப் பிரச்சினை ஆகும்.

★

**நன்கொடை**

அடையாற்றில் மாதர் இந்திய சங்கத்தினரால் நடத்தப்படும் புற்று நோய் சிகிச்சை சாலைக்கு சென்னை நகரசபை ரூ 5000, நன்கொடை அளிக்க சென்னை சர்க்கார் அனுமதித்துள்ளனர்.

★

**நில அதிர்ச்சி**

செவ்வாய் அன்று காலை 8-45-மணிக்கு காட்மண்டுவில் 10 செகண்டுகள் நில அதிர்ச்சி ஏற்பட்டதாம். ஏதும் சேதமில்லை என்று தெரிகிறது.

★

**வெள்ளோட்டம்**

பம்பாய்—சென்னை—சிங்கப்பூர் கோடி விமானப் போக்குவரத்து ஜூலை 16-ல் ஆரம்பிக்கப்படும். அதற்கான வெள்ளோட்டம் ஜூலை 4-ம் தேதியன்று நடைபெறும் என்று தெரிகிறது.

★

**தாக்குதல்**

சாம்பியன் ரீபில் உள்ள கம்யூனிஸ்டு கட்சித் தொழிலாளர் காரியாலயம், தாழ்த்தப்பட்ட சம்மேளனத்தைச் சேர்ந்தவர் களெனப்படும் சிலரால் தாக்கப்பட்டதாகத் தெரிகிறது.

★

**மாநாடு**

இந்திய தேசிய காங்கிரசின் அடுத்த மாநாடு தாம்பரத்திலாவது அல்லது ஆவடியிலாவது நடைபெறலாம் என்று தெரிகிறது.

★

**பி. சி. ஜி.**

நாட்டில் மக்களுக்கு காச நோய் ஏற்படாது தடுக்க பி. சி ஜி ஊசிகள் குத்துவது அதிகப்படுத்தப்படும் என்று சென்னை அமைச்சர் ஏ பி. ஷெட்டி ஈரோட்டில் பேசுகையில் கூறினார்.

# கழகக் கூட்டங்கள்

★

## குன்னூர்

(நீலகிரி)
சவகர்பேட்டையில்
3—7—54 மாலை 4-30 மணிக்கு
பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத்
எஸ். அப்பாவு

★

## ஆவடி

ஏரி மைதானத்தில்
4—7—54 மாலை 5 மணிக்கு
தலைவர்:
சி. வி. எம். அண்ணாமலை
பேசுவோர்:
சி. என். அண்ணாதுரை
அ. பொன்னம்பலனார்
டி. சண்முகம், எம்.எல் ஏ.

★

## புவனகிரி

4—7—54 மாலை 6 மணிக்கு
தலைவர்:
ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ
பேசுபவர்:
சி. பி. சிற்றரசு

★

## குனியமுத்தூர்

தி.மு.கழக ஆண்டு விழா
மாசியம்மன் கோவில் திடலில்
4—7—54 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத்
எஸ். அப்பாவு

குறிப்பு:—காலை 9 மணிக்கு தோழர்கள் கோவை செழியன், கே. அ. இராசமாணிக்கம் ஆகியவர்களால், கழகத் தோழர்கள் இல்லந்தோறும் கொடியேற்றப்படும்.

* * *

**வரவேற்புக் கூட்டம்**

நீலகிரி மாவட்டம் நாயாய் கோத்தகிரி ஆகிய தி மு கழகங்களின் சார்பில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களுக்கு 4—7—54 பிற்பகல் 1 மணிக்கு கோத்தகிரி மைதானத்தில வரவேற்புக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் எஸ் அப்பாவு ஈ வெ. கி. சம்பத் பேசுவர்.

★

## திருப்பூர்

வள்ளுவர் திடலில்
4—7—54 மாலை 6-30 மணிக்கு
பேசுவோர்:
அ. ச. இளங்கோ
கே சி. செல்வன்

**சென்னை 19-வது வட்ட தி.மு.க. உறுப்பினர்கட்கு**

4—7—54 மாலை 3 மணியளவில் சென்னை, 19-வது வட்ட தி மு. கழகக் கட்டிடத்தில் செயற் குழுக் கூட்டம் நடைபெறும்.

**44 வது வட்ட தி. மு. க. செ. கு. உறுப்பினர்கட்கு**

சென்னை, மயிலை 44-வது வட்ட தி. மு. க. செயற்குழு உறுப்பினர் கூட்டம் 3—7—54 சனி இரவு 8-30 மணிக்கு, எம் கே. அம்மன் கோவில் தெரு, ரெட்டியார் தோட்டத்தில் நடைபெறும்.

**மாயூரம் நகர தி.மு.கழக செ. கு. உறுப்பினர்கட்கு**

4—7—54 காலை 9½ மணிக்கு பெரியகடை வீதி, தோழர் எஸ். என். குருமூர்த்தி கடை மாடியில் செயற் குழுக் கூட்டம் நடைபெறும்.

# புதுக் கட்சி ஆரம்ப விழா

## வி. கோபால கவுண்டர் அழைப்பு

4—7—54 ஞாயிறு மாலை 3-30 மணிக்கு திண்டிவனம் காவேரிப்பாக்கம் வி. கோபால் கவுண்டர் எம் எல். ஏ. அவர்கள் இல்லத்தில் தென்னாற்காடு ஜில்லா வன்னியகுல க்ஷத்திரிய பிரமுகர்களும், உழைப்பாளி கட்சியை ஆதரித்த பிரமுகர்களும் சேர்ந்த ஆலோசனைக் கூட்டமும், புது கட்சி ஆரம்ப விழாவும் நடைபெறும்.

புது கட்சிக்கு வேண்டிய திட்டமும், கொள்கையும் தீட்டி எதிர்காலத்தில் வன்னிய மக்களுக்கும், இதர பிற்பட்ட இனத்தவர்களுக்கும், ஆதித்திராவிட மக்களுக்கும் முன்னேற்றம் தேட, வழிவகைச் செய்யப்படும், எதிர்கால தேர்தல்களில் நமது கட்சி சார்பில் ஒவ்வொரு தொகுதிக்கும் அபேட்சகர்களை நிறுத்தி வைத்து, வெற்றி காண முயற்சியின் ஈடுபட, தகுந்த ஆலோசனை கூற தங்கள் வருகை பெரிதும் எதிர் பார்க்கப்படுகிறது.

அதுசமயம் தென்னாற்காடு ஜில்லா போர்டு தேர்தலில் நமது கடமை குறித்து திருக்குறளார் வீ முனுசாமி எம். பி., நடேத்திட்டு என. டி. கோவிந்தசாமி கச்சிராயர் எம். பி., மனத்தூர் பூவராகசாமி எம். பி, த பழுதூர் அய்யாறு எம். எல். ஏ, கடலூர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., ஆகியோர் பேசுவார்கள்.

மேலும் வருகின்ற ஜில்லா போர்டு தேர்தலுக்கு அபேட்சகர்களை பொறுக்கி எடுக்க அட்ஹாக் கமிட்டி நிறுவப்படும்.

**உருவப்பட திறப்பு விழா பொதுக்கூட்டம்**

சென்னை திருவல்லிக்கேணி, கே. எஸ். பாண்டியன் படிப்பகத்தின் சார்பில், 4—7—54 ஞாயிறு மாலை 6 மணிக்கு ஐயாசாமி செட்டித் தெருவில் (ஐஸ் ஹவுஸ் சமீபம்) மூதறிஞர் எஸ். முத்தையா முதலியார் திருவுருவப் படத் திறப்பு விழா பொதுக்கூட்டம் நடைபெறும்.

தலைவர்:
காஞ்சி-கல்யாணசுந்தரம்
படத் திறப்பாளர்:
புலவர் நன்னன்
சிறப்புரை:
பேராசிரியர் க. அன்பழகன் M A.
முகவை ஆர். எஸ். பாண்டியன்

**சிறப்புச் சொற்பொழிவு— இசை விருந்து**

மதுரை நகர் தி. மு. கழக நிதிக்காக 4-7-54 ஞாயிறு காலை 10 மணிக்கு மீனாட்சி டாக்கீஸில் சி. ஆர். சௌந்திராசன் குழுவினர் பின்னணியுடன், 'இசை முரசு' நாகூர் ஈ. எம். அனீபா அவர்களின் இன்னிசையும், சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டமும் நடைபெறும்.

**இயக்க பிரசார நாடகம்**

3—7—54 சனியன்று, பொன்னாச்சி ராஜா தியேட்டரில, தோழர்கள் ஆர். எஸ். செல்வா, கலைநாதன் ஆகியோரின் தி. மு கழக இயக்கப் பிரசார நாடகம் தோழர் எஸ். முத்து தலைமையில் நடைபெறும்.

# உலக அரங்கில்

**லண்டன்:**

வட இங்கிலாந்தின் மிகப் பெரிய தின இதழான 'யார்க் ஷயர் போஸ்ட்' தனது 200வது ஆண்டு விழாவைக் கொண்டாடுகிறது. 1754ம் ஆண்டு ஜூலை 2-ல் 'லீட்ஸ் இன்டெலிஜன்சர்' என்ற வார இதழாகத் துவக்கப்பட்ட அந்த இதழ் 112 ஆண்டுகளுக்குப் பிறகு 'யார்க் ஷயர் போஸ்ட்' ஆக மாறியது.

★

**நியூயார்க்:**

இங்கிலாந்து பிரதமர் சர்ச்சிலும் வெளிநாட்டிலாகா மந்திரி ஈடனும் 'குயீன் எலிசபெத்' கப்பலில் இங்கிலாந்துக்குப் புறப்பட்டனர். ஒட்டாவாவிலிருந்து விமானம் மூலம் இங்கு வந்த அவர்கள் பத்திரிகை நிருபர்களைக்கூடப் பார்க்காது அதிகாலையிலேயே கப்பலேறினர். அவர்கள் அமெரிக்காவிற்கு ஜனாதிபதி ஐசனோவரைச் சந்திக்கச் சென்றிருந்தனர் என்பது ஞாபகமிருக்கலாம்.

★

**ஜெனீவா:**

இங்கு நடைபெறும் இந்தோ-சீன போர் நிறுத்த மாநாட்டில் பிரெஞ்சுக்காரர்கள், வியட்மின்னுடன ஒரு பிரிவினை ஒப்பந்தம் செய்து கொள்வதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்வதாகத் தெரிகிறது.

**காஞ்சி தியாகராயர் மன்றம் இரண்டாவது ஆண்டு சிறப்பு விழா**

4—7—54 மாலை 6 மணிக்கு காஞ்சிபுரம் கண்ணன் டாக்கீஸ் மைதானத்தில், தோழர் ஆர் கே. மூர்த்தி தலைமையில் மேற்படி விழா நடைபெறும். தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், கோகுலகிருட்டிணன் ஆகியோர் பேசுவர்.

**கால் பந்தாட்டக் கழக 2-வது ஆண்டு விழா**

அறந்தாங்கி, காரப்பேட்டை, வ. பு. அ. சௌந்தரபாண்டியன் கால் பந்தாட்டக் கழகத்தின் இரண்டாவது ஆண்டு விழா 4—7—54 ஞாயிறன்று வி. வி. தனுஷ்கோடி நினைவு பந்தலில நடைபெறும். விழாவில், சென்னை மாநில அமைச்சர் கே. காமராஜ், மறைந்த மாவீரர்கள் வி. ஓ சிதம்பரம், வ. பு. அ. சௌந்தரபாண்டியன், வி. வி. தனுஷ்கோடி, கே. கே. ஏ. பெரியசாமி ஆகியவர்கள் படத்தைத் திறந்து வைக்கப்படும்.

**திருமணங்கள்**

4—7—54 காலை 7½ மணிக்கு பெரிய காஞ்சிபுரம், ஏகாம்பரநாதர் சன்னதித் தெரு, 11-பி எண்ணுள்ள இல்லத்தில தோழர் ஏ. இராசமாணிக்கத்திற்கும் — தோழியர் வள்ளியம்மைக்கும் திரு டி. சி. கருப்பண்ணன் தலைமையில் திருமணம் நடைபெறும். பொதுச்செயலாளர் சி. என். அண்ணாதுரை, தோழர்கள் சி. வி. எம. அண்ணாமலை, கே. டி. எஸ். மணி ஆகியோர் சிறப்புரை வழங்குவர்.

* * *

திருவள்ளூர் தி. மு க. உறுப்பினர் தோழர் டி. எம் கோவிந்தசாமிக்கும்—தோழியர் இலக்குமிக்கும் திருவள்ளூர் அடுத்த நரசிங்கபுரம் கிராமத்தில 4—7—54 காலை 9 மணியளவில், தோழர் மீனாட்சிசுந்தரம் தலைமையில் சீர்திருத்தத் திருமணம் நடைபெறும். தோழர் டி. ஆர். வரதன், மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவர்.

**வாஷிங்டன்:**

அமெரிக்காவில் உள்ள இந்தியத் தூதுவர் ஜி. எல். மேத்தா அமெரிக்க ஜனாதிபதி அய்சனோவருக்கு எட்டு பாகங்களாக எழுதப்பட்ட மகாத்மா காந்தியாரின் சரிதமொன்றைத் தந்தார். இந்த பரிசளிப்பு ஜனாதிபதியின் 'வெள்ளை மாளிகை'யில் நடைபெற்றது.

* * *

பிரதிநிதிகள் சபையின் நீதி விசாரணைக் குழு, சமாதான காலத்தில் 5-ம் படை வேலை செய்பவர்களுக்கு, அக்குற்றத்துக்கு மரண தண்டனை தரவேண்டும் என்கிற மசோதாவை அங்கீகரித்துள்ளதுடன் வெளிநாட்டு ஒற்றர்களையும் மற்றவர்களையும் பதிவு செய்ய வேண்டுமெனவும் கோரியுள்ளது. கம்யூனிஸ்டுகளையும், அரசுகளைக் கவிழ்ப்பவர்களையும் தண்டிப்பதற்காக அமெரிக்க காங்கிரசிற்கு அனுப்பப்பட்டுள்ள சட்டசபை நடைமுறை விதிகளில், இந்த மசோதாவும் ஒரு பகுதியாகும்.

★

**பாரிஸ்:**

செங்கடல் தீரத்திலிருந்து 1600 சதுர மைல்களுக்கப்பால் பிரெஞ்சுத் துருப்புகளை திரும்பி வந்து விடும்படி பிரான்சின் புதிய இராணுவ தளபதி உத்தரவிட்டுள்ளார். அவர்கள் காலி செய்கிற இடம் 20 லட்சம் மக்களையும், மூன்று முக்கியமான மிகப் பெரிய நகரங்களையும், உலகத்தின் மிக வளமான நெல் வயல்களையும் தீரத்தையும் உடையது.

★

**மாஸ்கோ:**

சோவியத் ரஷ்யாவின் அதிகார பூர்வமான இதழான 'பிராவ்தா' வாஷிங்டன், டெல்லி பேச்சு வார்த்தைகளைப் பற்றி குறிப்பிடுகையில், இரண்டு பேச்சு வார்த்தைகளும் முரண்பாடுடையவை எனக் கூறுகிறது.

★

**கான்பெர்ரா:**

ஆஸ்திரேலியாவின் பிரதமரான ராபர்ட்மென்சீஸ், தோழர் அட்லி, வருகிற ஆகஸ்டில் சீனு செல்லும்போது ஆஸ்திரேலியாவிற்கும் வந்து அரசாங்க விருந்தினராக இருந்து செல்லவேண்டுமெனக் கோரி அட்லிக்கு தந்தி மூலம் செய்தி அனுப்பியுள்ளதாகத் தெரிகிறது.

★

**கேப்டவுன்:**

'செவ்வாய் கிரகம்' 1941-ல் இருந்ததைவிட நடந்த ஜூன் 25-ல் பூமிக்கு வெகு அருகில் காணப்பட்டதாக அமெரிக்காவைச் சேர்ந்த ஸ்லைபர் என்ற விஞ்ஞானி ஆப்பிரிக்காவின் 'ஆரஞ்சு பிரி ராஜ்யத்'தில் உள்ள ப்ளோம்பான்டெயின் என்ற இடத்தில் நடத்திய வானிலை ஆராய்ச்சியில் கண்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

★

**டோக்கியோ:**

'ஜப்பான்—இந்தியா—பாகிஸ்தான் வழி' என்ற பெயரில் பெர்சிய வளைகுடாவிற்கும், ஜப்பானுக்கும் இடையில் இந்தியா, பாகிஸ்தான் வழியாக, புதிய ஒரு கப்பல் போக்குவரத்து ஏற்படுத்துவதற்கு நான்கு ஜப்பானிய கப்பல் கம்பெனிகள் ஒன்றுசேர்ந்து முயற்சித்துள்ளன. இந்தப் புதிய கப்பல் போக்குவரத்து மாதம் இருமுறை நிகழும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா.நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால், அறிஞர் அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (94, நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.